ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

==========================================================================

# இனக்குழு வழிபாட்டின் அழிவும் பலராமர் வழிபாடும்

முனைவர் வி.காயத்ரி பிரியதர்ஷினி,
உதவிப்பேராசிரியர்,
ஜி.டி.என்.கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

==========================================================================

## முன்னுரை

வைணவம் திருமாலை முதன்மைக் கடவுளாக முடிந்த பேருண்மையாகக் கருதுகின்றது. அத்திருமாலின் சிறப்புகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அவர் எடுத்த அவதாரங்கள் குறித்த செய்திகள் தமிழ் இலக்கியங்களில் பலவிடங்களில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவதாரங்கள் பல இருப்பினும் இராமன் மற்றும் கிருஷ்ண அவதாரங்கள் பெற்ற சிறப்பு பிற அவதாரங்கள் பெறவில்லை. அதில் குறிப்பாக கிருஷ்ண அவதாரத்தில் கிருஷ்ணனின் சகோதரனாகக் காட்டப்படும் பலராமன் உழவுத் தெய்வமாக, எளிய மக்களான அடித்தள மக்களின் கடவுளாக போற்றப்படுகிறார். பின் நிலவுடமைச் சமூகம் உருவாகி அதிகார வர்க்கமாக நிலைபேறு அடைந்தவிடத்து அச்சமூகம் வலியுறுத்திய, வரையறுத்த வழிபாட்டு முறைகளுக்குப் பின்னாக கிருஷ்ணனின் சகோதரன் என்றளவிலேயே பலராம வழிபாடு மாறியது. இலக்கியங்களிலும் வர்ணனை என்ற அளவிலேயே பலராமன் குறித்த சித்திரிப்பு நின்று விட்ட தன்மையையும் காணமுடிகின்றது. இதை ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றிய இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. இனக்குழு வழிபாட்டில் பல சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் வழக்கிழந்ததைப் போல பலராம வழிபாடும் வழக்கிழந்தது. இவ்வாறு இனக்குழு வழிபாட்டின் அழிவோடு பலராம வழிபாடும் முடிவு பெற்ற தன்மையைக் குறித்து இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

## வைணவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்:

வேத காலத்திலேயே தோற்றம் பெற்ற வைணவ வழிபாட்டை, வைணவ மதத்தினை ஆராய்ந்தறிய வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தொல்பொருள் ஆவணங்கள் இவற்றைக் கணக்கில் கொண்டே ஆராயப்படுதல் வேண்டும். இம்முறை வைணவ சமயம் குறித்த ஓர் அடிப்படைப் புரிதலைத் தரும். இலக்கியங்கள் வைணவத்தை அறிந்து கொள்வதற்கான முதற்படி என்ற முறையில் ஆராய முற்படுவோமேயாயின் *ராமாயணம், மகாபாரதம், பாகவத புராணம், பிரம்ம வைவர்த்த புராணம்,அக்னி புராணம்* போன்றவை துணையாய் நிற்கின்றன. இவை முதன்மைக் கடவுளான விஷ்ணுவை பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்த உதவிற்று எனலாம். இதனைக் கீழ்வரும் கருத்தின் வாயிலாக மேலும் வலுசேர்க்க இயலும்.

> "ஆஸ்வலாயன கிருஹ்ய சூத்திரம் குறிப்பிடும் இருபத்தி நான்காயிரம் செய்யுள்களை உடைய ஆதிபாரதம் மக்களிடையே பரவி செல்வாக்குப் பெற்ற சூதர்களுக்குச் சொந்தமான அக்கதைப்பாடல் கௌரவர்கள், பாண்டவர்கள் என்னும் பரதப்பழங்குடி பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற போராட்டத்தைச் சித்தரிக்கிறது. பின் பிருகைதை பிராமணர்கள் அதைக் கவர்ந்தார்கள் நூறாயிரம் செய்யுட்களை உடைய காவியமாக அதைப் பெருக்கி மகாபாரதம் ஆக மாற்றி அமைத்தார்கள்".(பக்25-26, வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்,சுவிரா ஜெய்ஸ்வால்)

இதிகாச ஆராய்ச்சிகள் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள இக்கருத்தைத் தவிர்த்துவிட்டு வைணவ ஆராய்ச்சியை மேற்கொள்ள இயலாது என சுவிரா ஜெய்ஸ்வால் கருதுகிறார். பழங்குடி மக்களின் கதைகள் காலப்போக்கில் வைதீக பிராமணர்கள் தங்கள் சமயச் சடங்குகளையும், ஒழுக்க விதிகளையும் புகுத்தி இக்காவியத்தை மிகப்பெரும் இதிகாசமாக மாற்றினர். இவ் இதிகாசம் விஷ்ணுவின் அவதார நோக்கத்தை விரித்துக் கூறியதோடு நில எல்லைகள் கடந்து பல மாறுதல்களுக்கும் பல உட்சேர்க்கைகளுக்கும் உள்ளானது.

> "விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர். இரட்சகர் யாவரையும் படைத்துக் காத்து வருபவர்.பாஞ்சாராத்திரத்தில் விஷ்ணுமூர்த்தியே அரூபியாய் ஆதி மூலப்பொருளாய் எவ்விடத்தும் நிறைந்து ஞானவடிவினராய் இருக்கிறார். …………… இவரது வியூக அவதாரங்கள் வாஸுதேவர், சங்கர்ஷணர்,பிருத்யும்னர், அநிருத்தர் என நான்காகும்". (ப.25, இந்து மத இணைப்பு, ஆறுமுக நாவலர்)

இங்கே அவதாரங்கள், வியூக அவதாரங்கள் என அவதாரங்கள் பிரிக்கப்பட்டிருந்தமையும் காணமுடிகின்றது.

விஷ்ணு என்ற கடவுள் நாராயணன், வாசுதேவ கிருஷ்ணன், ராமன் எனப் பல பெயர்களோடு ஒருவரே பல அவதாரங்களாக பிரிந்ததாக இதிகாசங்கள் இயற்றப்பட்டன.ரிக் வேதத்தில் சிறு தெய்வமாக இருந்த விஷ்ணு பெரும் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டதோடு தமிழ் நிலப்பகுதியில் ஆழ்வார்களும் ஆச்சாரியர்களும் வணங்கும் வலியுறுத்தும் பெருந்தெய்வமாக உயர்நிலையை அடைந்தார்.

> "வைணவம் விட்ணுவை (திருமாலை) முடிந்த பேருண்மையாகக் கொண்டு திகழும் சமயமாகும். இச்சமயம் பாகவதம், பாஞ்சரத்திரம், சாதவதம், ஏகாந்தகம் என்ற திருநாமங்களாலும் வழங்கப்பெறும்.(ப.17, வைணவமும் தமிழும், ந.சுப்புரெட்டியார்)

இங்கே வைணவம் என்ற பெயரோடு நின்று விடாமல் அவை பல பெயர்களால் வழங்கப்பட்டதையும் அறியமுடிகின்றது.

தமிழ்நாட்டில் வைணவம்

தமிழ் நிலப்பகுதியினைப் பொறுத்தவரை வைணவம் தொடர்பாக பல கருத்துக்கள், முரண்கள் திறனாய்வாளர்கள் இடையே நிலவுவதைக் காணமுடிகின்றது. வைணவ சமயத்தின் தொடக்கம் தொல்காப்பியத்திலிருந்தே துவங்குகின்றது. தொல்காப்பியர் குறிப்பிடும்

" மாயோன் மேய காடுறை உலகமும்"

என்பது முல்லை நிலத்து ஆயர்கள் வழிபட்ட இறைவனான திருமாலையே குறித்து நிற்கின்றது. திருமாலே விஷ்ணுவின் அவதாரமாகவும் பின்னர் உருவாக்கப்பட்டார். இத்திருமாலே விஷ்ணு என்ற கருத்தும் பின்னர் வலுப்பெற்று வளர்ந்தது.

> "தொல்காப்பியர் "மாயோன் மேயக் காடுறை உலகமும்" என்று கூறும்பொழுது முல்லை நிலத்தின் பொதுத் தெய்வமான மாயோனைக் குறிப்பிடுகின்றார். மாயோனை அவர் விஷ்ணுவுடன் இணைத்துக்காணவில்லை. முல்லை நில மக்கள் வணங்கிய ஒரு எளிமையான, தெய்வத்தினைப் பற்றிய தத்துவத்துக் கருத்துக்கள், மிகைப்படுத்தப்பட்டக் கருத்துக்கள் ஆகியன பற்றி சங்க இலக்கியம் கூறவில்லை. மாயோன், நெடியோன், திகிரியோன், திருமால் என்று இத்தெய்வம் குறிப்பிடப்பட்டாலும், மிக எளிமையான நம்பிக்கை சார்ந்த தெய்வமாகவே காட்சிதருகிறது".(ப.36,சங்ககால வைணவம்,எஸ்.தோதாத்ரி)

பாவாணர் விஷ்ணு என்பதே தமிழ்ச்சொல் என்ற கருத்தையும் முன்வைக்கின்றார்

> "விஷ்ணு என்னும் வடசொல் விண்டு என்னும் சொல்லினின்று அமைத்துக் கொள்ளப்பட்டது".(ப.348- தமிழர் நாகரீகமும் பண்பாடும், தட்சிணாமூர்த்தி)

இங்கே விஷ்ணுவை தமிழ்க்கடவுளாக அவர் சித்தரித்திருப்பது புலனாகின்றது. தமிழ்க் கடவுளான விஷ்ணுவை வடஇந்தியா தன்வயமாக மாற்றிக்கொண்டது என்றும் கூறுகின்றார். தமிழ் இலக்கியங்களிலும் திருமால் குறித்த செய்திகளும் திருமாலின் அவதாரம் குறித்த தகவல்களும் இடம்பெறுகின்றன. ஆனால் அவதாரக் கருத்துக்கள் அனைத்தும் வட இந்தியாவில் வழங்கப்பட்ட விஷ்ணு அவதாரக் கதைத் தொடர்ச்சியாகவே அமைகின்றது. தமிழகத்தில் நிலவிய குறிப்பாக சங்ககாலத்தில் வணங்கப்பட்ட, வலியுறுத்தப்பட்ட தெய்வங்கள் அனைத்தும் இனக்குழூச் சமுதாய தெய்வங்களாகவே இருந்தன. சங்க இலக்கியங்கள் குறிப்பிடும்

திருமால்,கிருஷ்ணன்,பலராமன் போன்ற தெய்வங்களை இனக்குழுச் சமுதாயத்தின் சமயமாகத்தான் கொள்ளவேண்டும். சங்ககாலச் சமயத்தெய்வங்களைத் தலைமை தெய்வங்கள், நம்பிக்கை சார்ந்த சிறு தெய்வங்கள் என இரண்டாகப் பிரித்து ஆராய்வதற்கு வாய்ப்புகள் அதிகம். சங்ககாலம் தொடங்கி பக்தி இலக்கியக்காலம் வரை திருமாலின் அவதாரம் தொடர்பான செய்திகளில் இராமன், கிருஷ்ணன், பலராமன் போன்ற அவதாரங்கள் குறித்த செய்திகளை விரிவாகக் காணமுடிகின்றது. மு. இராகவவையங்கார் தமிழகத்தின் வேளிர் என்ற இனக்குழுச்சமுதாயத்தைக் கண்ணனோடு இணைத்து காணும் முயற்சியை மேற்கொண்டார். தன்னுடைய *வேளிர் வரலாறு* என்ற நூலில் அதற்கான சான்றாதாரங்களையும் தந்துள்ளார். இது வைணவ சமயத்தை இனக்குழு சமயமாகக் கண்டதன் விளைவு என்றே கூறவேண்டும்.

> "துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடிமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டோரையும் அருவாளரையும் கொண்டு வந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்தனர். என்பன. இவற்றுள்ளே துவராபதி நிலங்கடந்த நெடிமுடியண்ணல் என்பது துவாரகையை உண்டாக்கியாட்சி புரிந்தருளிய திருமாலவதாரமாகிய கண்ணபிரானையே குறிப்பதென்பது தெளிவாம்... ... அகத்திய முனிவர் துவாரகை சென்று கண்ணபிரானது வழியினராகிய அரசரையும், வேளிரையும் தென்னாட்டிற் குடியேற்றினார்". (ப.131, வேளிர் வரலாறு, மு. இராகவவையங்கார்)

இதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் இருங்கோவேளைக் கபிலர் புகழ்ந்து பாடும் புறநானூற்றுப் பாடலையும் மேற்கோளாகக் காட்டுகின்றார். மு. ராகவவையங்காரின் வேளிர் வரலாற்றை மறுத்து மாகறல் ப.தி.கார்த்திகேய முதலியார் *வேளிர் வரலாறு மறுப்பு* என்னும் ஆய்வுக்கட்டுரையில் மு. இராகவவையங்கார் முன்வைக்கும் வாதங்களை மறுத்து எழுதியிருப்பதும் நோக்கத்தக்கது. இவ்வாறு வைணவ சமயம் குறித்து தமிழ்நிலப்பகுதியில் பல கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் பின்னாளில் வைணவ சமயம் தனிப்பெரும் சமயமாக வளர்ச்சியடைந்தது. என்பதை ஆழ்வார்கள், ஆச்சாரியார்கள் பாடல்கள் மற்றும் உரைகள் வாயிலாக அறியமுடிகின்றது. இவ்வைணவ சமயத்தில் கண்ணன் (விஷ்ணு) பெறும் சிறப்பு பிற அவதாரங்கள் பெறவில்லை. அவதாரங்களில் ஒன்றான பலராம வழிபாடு வலுப்பெற்றிருந்ததும் பின் வழக்கிழந்தமையும் நோக்கத்தக்கது.

## பலராமனுக்கு வழங்கப்படும் பெயர்கள்

விஷ்ணுவின் எட்டாவது அவதாரமாகப் போற்றப்படுவது பலராமர் அவதாரம். கிருஷ்ணனின் சகோதரன் என்ற நிலையிலேயே இவ்அவதாரம் நோக்கப்படுகின்றது. பலராமன் குறித்த செய்திகள் சங்க இலக்கியம் தொடங்கி பக்தி இலக்கியம் வரை தொடர்ந்து கூறப்பட்டிருப்பினும் அது வலுவிழந்த நிலையிலேயே சித்திரிக்கப்பட்டுள்ளது. ஒரே காலக்கட்டத்தில் எழுந்த அவதாரங்கள் என்ற நிலையில் இராமவதாரம், பரசுராம அவதாரம் இடம்பெறுவதைப்போன்று கிருஷ்ண அவதாரமும் பலராம அவதாரமும் இதிகாசங்களில் இடம்பெறுகின்றன. அவ்வகையில் கிருஷ்ணன் இலக்கியங்களில் பல பெயர்களில் வழங்கப்படுவதைப்போன்று பலராமனும் பல பெயர்களில் வழங்கப்படுவதைக் காணமுடிகின்றது.

> "வெற்றிக்கலப்பைப்படை யோனொழியப் புத்தனென்று புகழப்படுமே"

(ப.19, பிங்கல நிகண்டு)

> "பலபத்திரன் இரேவதி கொழுநன் குண்டலன் அச்சுதன் முன்னோன் பனந்து சன்முசலி கரந்துகிலுடையோன்(ப.20. பிங்கலநிகண்டு)

அமரகோஷ நிகண்டு பலராமனுக்கு 15 பெயர்களை எடுத்துக் கூறுகின்றது.

> "உலக்கைத்தடியன் பனைக்கொடியோன் கலப்பைக்கையன் நீல ஆடையன் யமுனைத்திருப்பி ரோகினிமைந்தன் ரேவதி காதலன்... ... ... ... ... ... ."

எனப் பலராமன் செயலாலும் நிறத்தாலும் உடைமையாலும் போற்றப்படும் முறையைக் காணமுடிகின்றது. மகாபாரதத்தில் பலராமன் குறித்த சித்திரிப்பை நோக்குமிடத்து கிருஷ்ணனுடன் இணைந்து அவரின் மனவிருப்பத்திற்கேற்ப செயலாற்றும் ஒரு பாத்திரமாக அவர் செயல்படுவதை இதிகாசத்தின் வழி அறியமுடிகின்றது. மேலும் *கண்ணபிரானைப்பற்றிய தமிழ்நாட்டு வழக்குகள்* என்னும் ஆய்வுக்கட்டுரையில் மு. இராகவவையங்கார் பலராமன் குறித்துக் கீழ்வரும் கருத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

*"பனைக்கொடியைத் தனியே எடுத்துக்கொண்டு ஆசிரியர் விதி கூறுதலினின்று, அக்கொடி அக்காலத்து வழக்கு மிகுதி பெற்றிருந்தது என்பது பெறப்படும். இங்ஙனம் பிரபலம் பெற்ற பனைக்கொடி, நம்பி மூத்தபிரானான பலதேவர்க்கன்றி வேறெவரோடும் உரியதன்றென்பது கற்றார் அறிவர்…………………………. இதுகாறுங் கூறியவற்றால் சங்கர்ஷன வாசுதேவர்கள் வடநாட்டிற் போலவே தமிழகத்தும் தொன்றுதொட்டு வழிபடப்பட்டுவந்த அவதார மூர்த்திகள் என்பது புலனாகும்."(ப.52, கண்ணபிரானைப் பற்றிய தமிழ்நாட்டு வழக்குக்கள், மு. இராகவவையங்கார்)*

*பனைக்கொடி குறித்துத் தொல்காப்பியர் கூறும் விதியினை அடிப்படையாக வைத்து தம் கருத்தை முன்வைக்கின்றார்.*

*தமிழ் இலக்கியங்களில் பலராமன் குறித்தச் சித்திரிப்பு*

*தமிழ் இலக்கியங்களில் பலராமர் வழிபாடு குறித்து இலக்கியச்சான்றுகளும் இலக்கியமல்லா பிற தொல்லியல் போன்ற ஆவணச்சான்றுகளும் வழி அறியமுடிகின்றது. கீழ்வரும் தொ.பரமசிவனின் கருத்தினைப் பலராமன் குறித்த இதிகாசப் புராணச்சித்திரிப்போடு பொருத்திப்பார்க்க இயலும்.*

*"தெய்வங்களின் வடிவமும் குணமும் அவை சார்ந்த சமூகத்தின் தேவைகளையொட்டி அமைந்தவைதான் கால்நடை வளர்ப்போரின் தெய்வம் மாடுகள், கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழலுடன் இருக்கமுடியும். உழவர்களின் தெய்வம் மழை தருகின்ற இந்திரனாகவோ அல்லது கையிலே கலப்பை ஏந்திய பலராமனாகவோத்தான் இருக்கமுடியும். சுருங்கச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட இனக்குழு என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்திருக்கிறதோ அதைப்பொறுத்து அத்தெய்வங்களின் வடிவங்களும் குணங்களும் அத்தெய்வத்தினைப் பற்றிய கதைகளும் அமையும்". (ப.3,தெய்வங்கள், தொ.பரமசிவம்)*

*பலராமன் அடிப்படையில் உழவர்களின் இறைவனாக வணங்கப்பட்டதையும் உணவுக்கான தெய்வமாகப் போற்றப்பட்டதையும் சுவிரா ஜெய்ஸ்வாலின் ஆய்வின் வாயிலாகவும் அறியமுடிகிறது.*

*"சங்கர்ஷணர் என்ற சொல்லின் பொருள் உழுதல் அல்லது சாலிழுத்தல் என்பது இந்தப்பண்பானது அவர் விவசாயத்துடன் கொண்ட தொடர்புக்குத் தக்க சான்றாகும்".(பக்.81-82, வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும்,சுவிரா ஜெய்ஸ்வால்)*

*சங்க இலக்கியங்களில் பலராமன்:*

*"மாயோன் அன்ன மால்வரைக் கவா அன்<br>வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி எண்" (நற்றிணை- 32)*

*இங்கே மாயவனான திருமாலுக்கு முன்னவனான வாலியோனாகிய பலராமனைப் போன்ற வெண்மையான அருவிகளையுடைய மலைக்குத் தலைவன் என பலராமனின் நிறமாகிய வெண்மை நிறம் எடுத்துக்காட்டப்படுகின்றது.*

*"கடல்வளர் புரிவளை புரையும் மேனி<br>அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடியோனும்" (புறநானூறு-56)*

*கடற்கண்ணே வளரும் புரிந்த சங்கை ஒக்கும் திருநிறத்தை உடைய கொலையை விரும்பும் கலப்பையையும் பனைக் கொடியையும் உடைய பலராமன்*

*"பால்நிற உருவில் பனைக்கொடியோனும்" (புறநானூறு -58)*

*பால்போன்ற நிறத்தை உடைய பனைக்கொடியோன் (பலராமன்)*

*"ஒருகுழை அவள் மார்பில் ஒண்தார் போல ஒளிமிக" (முல்லைக்கலி - 5 வரி-11)*

*காதில் குழை மார்பில் சிவந்த மணலை உடைய நம்பி மூத்தபிரான் (பலராமன்)*

*"வானுற ஓங்கிய வயங்கொளிர் பனைக்கொடி<br>பால்நிற வண்ணன்போல் பழி தீர்த்த வெள்ளையும்" (முல்லைத்திணை 4, வரி-104)*

*ஆயரெல்லாம் சேரத்திரண்டு விளங்குகின்ற வானில் எறியும்படி ஓங்கிய ஒளிபெருகுகின்ற பாலின் நிறம் உடைய பனைக்கொடியோன்.*

*"பாலன்ன மேனியான்" (நெய்தற் கலி திணை 7, வரி-124)*

*பால்போன்ற நிறத்தை உடையவன்.*

*“ஒருகுழை ஒருவன் போல் இணர் சேர்ந்த மராஅடும்” (பாலைக்கலி திணை 7, வரி-124)*

*பலராமன் வெண்கடம்ப மரத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளான்.*

*“விறல்மிகு வலியலி பொலிபகழ் புழுதியின் நிறனுழும் வளைவாய் நாஞ்சிலோனும்” (பரிபாடல், 13, வரி 33-34)*

*விறல்மிகு வலியும் ஒலியும் பொலிந்து புழுதியை அகழுமாறு போல அவர் நிறத்தை உழும் நாஞ்சில் படையை உடையவன்.*

*“வாய்விளங்கும் வளைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை” (பரிபாடல்,1, வரி 20)*

*வாய் வளைந்திருக்கும் நாஞ்சில் என்னும் கலப்பையை ஒரு காதில் மட்டும் குழையாக மாட்டிக் கொண்டுள்ளாய்.*

*“வளையடு புரையும் வாலியோன்” (பரிபாடல்,2, வரி 20)*

*நீ சங்குநிறம் கொண்ட பலராமனுக்கு இளையவன்.*

*“பனைக்கொடியோன்” (பரிபாடல்,2, வரி 22)*

*பனைக்கொடியைக் கொண்டவன்.*

*“கருங்கண் வெள்ளை” (பரிபாடல்,3, வரி 8)*

*கரிய கண்களைக் கொண்ட வெண்மைநிறத்தவன்.*

*“உயர்கொடி நாஞ்சில்” (பரிபாடல்,4, வரி 8)*

*நாஞ்சிலைக் கொடியாகக் கொண்டவன்.*

*சங்க இலக்கியங்களில் குறிப்பாக பரிபாடலில் மட்டும் பலராமன் குறித்த விரிவான விவரணை இடம்பெறுகின்றது. இது வடமொழி இதிகாசங்கள் தமிழ் மொழியில், இலக்கியங்களில் ஏற்படுத்திய செல்வாக்கின் பிரதிபலிப்பாகக் கொள்ள முடிகின்றது. சங்ககாலச் சமுதாயத்திடையே காணப்படும் மருதநில வாழ்வியல், முல்லை நில வாழ்வியல், இனக்குழு வாழ்வினின்று மாறி நிலவுடமைச் சமூகம் உருவானக் காலக்கட்டமுமாகும். அதன்பின் ஆரிய, திராவிடக் கலப்பினால் முல்லை நிலக்கடவுள் மாயோன் கிருஷ்ணனாக மாற்றப்பட்டதும் பெருந்தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டதையும் நோக்க முடிகின்றது. வேளாண் தெய்வமான பலராமன் கிருஷ்ணனின் துணைமைத் தெய்வமாக மாற்றப்பட்டதையும் காணமுடிகின்றது. திருமாலோடு இணைத்தே பலராமனின் சித்திரிப்பும் தொடர்ந்து வருகின்றது.*

*பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்*

*“நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினைச்*
*“செங்கால் மராஅம் தகைந்தன” (கார்நாற்பது,19)*

*கலப்பைப் படை வெற்றியையுடையவனது வெண்ணிறம் போல பூங்கொம்பினையும் செவ்விய தாளினையுமுடைய வெண்கடம்புகள் மலர்ந்தன.*

*“பொற்பனை வெள்ளையை உள்ளாது ஒழுகின்னா” (இன்னா நாற்பது, கடவுள் வாழ்த்து)*

*பனைக்கொடியும் வெள்ளை நிறத்தையும் உடைய பலராமன் அவரை நினையாமை இன்னாது என சிவன்,திருமால், பலராமன், முருகன் இவரைத் தொழுதல் வேண்டும் என வலியுறுத்துகின்றது.*

*“மாயவனும் தம்முனும் போல மறிகடலும்*
*கானலும்சேர் வெண்மணலும் காணாயோ” (திணைமாலை நூற்றைம்பது,58)*

*மாயவனும், அவன் முன்னோனான பலராமன் போல, மறிகடலும் கடற்சோலையும் அச்சோலையைச் சேர்ந்த வெண்மணலும் காணாயோ!*

*காப்பியங்கள்*

*“வால்வளை மேனி வாலியோன் கோவில்” (இந்திரவிழவூர் எடுத்த காதை, வரி-171.*

*“புகர்வெள்ளை நாகர்தம் கோட்டம் வெள்ளை நாகர் ”*

*மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும் மேழியாகிய படையை வலமாக ஏந்திய பலதேவர் கோவில்*

*ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான சூளாமணி காப்பியத்தின் கதைத்தலைவனான திவிட்டன், விசயன் இருவரும் பலராமன், கண்ணன் அவதாரமாகக் கருதப்படுகின்றனர்.*

*பக்தி இலக்கியம்*

*திருப்பாவையில்*

"செம்பொற் கழராச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உகந்தேலோர் எம்பாவாய்" (திருப்பாவை-17)

செம்பொன்னால் செய்த சிலம்புகளை அணிந்த செல்வத்திருமகனான பலராமனே! நீயும், உன் தம்பியும் உறக்கத்தில் இருந்து எழுந்து எங்களுக்குத் தரிசனம் தர வேண்டும்.

மேற்குறிப்பிட்டப் பாடல்களில் அனைத்திலும் உருவத்தோற்றத்தை அடிப்படையாகக் கொண்ட வர்ணனை மட்டுமே முதன்மைப்படுத்தப்படுகின்றது. பலராமன் வரலாறோ, வடமொழி இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள பலராமன் குறித்த எந்தச் செய்தியும் பலராமனின் அற்புதங்களும் எடுத்துக்காட்டப்படவில்லை. பல பாடல்களில் கண்ணனோடு இணைத்தே பலராமன் கூறப்படுவதையும் காணமுடிகின்றது. பெரும்பான்மையான பாடல்களில் பலராமனின் வெள்ளை நிறம் மையப்படுத்தப்படுகின்றது. இது நிறத்தோடு இறைவனை இணைத்துக் கூறப்படும் தமிழர் மரபின் தொடர்ச்சி என்பதைக் காணமுடிகின்றது.

"தெய்வங்களைப் பேசும் இடத்தில் அவற்றின் நிறங்கள் பேசப்படுகின்றன. மாயோன் மலை போன்று நீலநிறமாக இருக்கிறான். வாலியோன்(பலராமன்) அருவி போல வெள்ளை நிறத்தில் இருக்கிறான்………………….. சிவபெருமான் நஞ்சுண்ட காரணத்தால் கருமையும் நீலமும் கலந்த வண்ணத்திலிருப்பதாக ஒரு பாட்டு கூறும்".(ப.112, கறுப்பு, தொ.பரமசிவன்)

நிறங்கள் கடவுளர்க்கு வலியுறுத்தப்படுவதை சங்க இலக்கியத்தின் பல பாடல்களிலும் குறிப்பாக கண்ணன் மற்றும் பலராமனுக்குத் தொடர்ந்து வருவதையும் நோக்க முடிகின்றது.

கடவுளர்க்கு வலியுறுத்தப்படும் கருவிகளும் ஆயுதங்களும் வலியுறுத்தப்படுவதற்கான பின்னணியில் சமூகப் பொருளாதார, அரசியல் காரணிகளும் இருப்பதையும் உணரமுடிகின்றது. முல்லை நிலத்து மக்களின் பண்பாட்டுக்கூறுகளோடு கண்ணனின் புல்லாங்குழலையும் பலராமனின் கலப்பை மற்றும் உலக்கை ஆயுதத்தையும் நோக்க வேண்டும்.

"கிருஷ்ணன், விருஷ்ணி – யாதவர் எனப்பட்ட கால்நடை வளர்க்கும் தொழிலை உடைய இரு குழுக்களின் தலைவன் ஆவான். பலராமன், சாத்துவர் (Satvata) உழவர்களின் குழுத்தலைவன் ஆவான். காட்டில் மாடு மேய்ப்பவர்களின் இசைக்கருவியான புல்லாங்குழலைக் கிருஷ்ணன் கையில் பார்க்கிறோம். உழவர்களின் குழுத்தலைவனான பலராமனோ கையில் கலப்பை ஏந்தியுள்ளான்". (ப.7,தெய்வங்கள், தொ.பரமசிவம்)

வேளாண் சமூகத்தின் பழங்குடி மக்களின் கடவுளான வேளாண்மைக்கும், உணவுக்கும் உதவும் அடிப்படையான கருவிகளான ஏரும் உலக்கையும் கொண்ட வெகுஜன மக்களின் கடவுள் பெருந்தெய்வ நிலை உருவாக்கத்தின் பின்னணியில் மறைக்கப்பட்டது நோக்கத்தக்கது. வேளாண் சமூகத்தின் தெய்வமான பலராமன் தொடர்ச்சியான வழிபாட்டிலிருந்து மாறியமையும் புலப்படுகின்றது.

"கலப்பையினையுடைய பலராமனை சங்கர்ஷணன் என்பர். சங்கர்ஷணன் என்ற சொல்லுக்கே உழவன் (Ploughman) என்று பொருள். என ஜான் டவ்சனின் இந்துக் கடவுள் புராணமரபு அகராதி கூறுகின்றது".(ப.74.பலராம வழிபாடு தொ.பரமசிவன்)

இனக்குழு மக்கள் உருவாக்கிய தெய்வமாக கண்ணன், பலராமன் கூட்டிணைவு காணப்படுகின்றது. இனக்குழு மக்களின் கடவுளின் எச்சம் என வலியுறுத்தப்படுவதன் பின்னணியில் இன்று கிராமப்புறங்களில் பலராமனைக் குறித்து நிற்கும் வெள்ளை மற்றும் பலராமனின் ஆயுதமான உலக்கையை மையமாகக் கொண்ட மக்கட் பெயர்களை இடுவதன் வாயிலாக இதை உணரமுடிகின்றது.

"பலராம வழிபாட்டின் எச்சமாக வெள்ளையன், வெள்ளைச்சாமி, வெள்ளைக்கண்ணு என்ற பெயர்கள் பாண்டிய நாட்டில் இன்றும் வழங்கக் காணலாம். வாலியோன் என்ற சொல்லுக்கும் வெள்ளையோன் என்றே பொருள்.கருப்புநிறச் சாமியாகிய கண்ணனிலிருந்து வேறுபடுத்தவும், கண்ணனின் அண்ணன் என்ற தொடர்பைக் காட்டவும் வெள்ளைக்கண்ணு வெள்ளைச்சாமி என்ற பெயர்கள் பயன்படுகின்றன". (ப.74.பலராம வழிபாடு தொ.பரமசிவன்)

மேலும் பலராமனின் ஆயுதத்தை மையப்படுத்திய மக்கட்பெயர் எனுமிடத்து,

"கண்ணனுக்கு மூத்தவனாகக் கருதப்படும் பலராமன் என்ற தெய்வம் ஒரு கையில் உலக்கையினை ஏந்தியிருக்கிறது. இந்தத் தெய்வத்திற்கு வடமொழியில் வழங்கப்படும் பெயர்களில் முசலி என்பதும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் மிக அரிதாக வழங்கும்

*முத்துலக்கையன் என்ற பெயர் இத்தெய்வத்தைக்குறிப்பதாகும்". (ப.74.உரலும் உலக்கையும் தொ.பரமசிவன்)*

*வடமொழியில் பலதேவர் குறித்த சித்திரிப்பும் தமிழ் மொழியில் பலராமர் சித்திரிப்பும் வேறுபடும் விதங்களும் நோக்கத்தக்கவை.*

*"சங்கர்ஷணர் முதலில் பிராமணரல்லாதவர்களான பாமர மக்களிடம் அதிக செல்வாக்கு பெற்ற கடவுள்; பின்னர், கி.மு.இரண்டாம் நூற்றாண்டிற்குப்பிறகு முன்னர் இவரும் விருஷினி வீரனான பலதேவரும் ஒருவராகக் கருதப்பெற்றனர். எனவே இறுதியில் இந்த வழிபாடும் நாராயண வாசுதேவர் பிராமண தெய்வ வழிபாடும் ஒன்றாகக் கலந்துவிட்டன. நாராயண வாசுதேவ ஆதிக்கம் பெற்றதனால் தொடர்ந்து விரிந்து வந்த பெயர்ப்பட்டியலோடு இரண்டற இணைந்துவிட்டது". (ப.88,வைணவ தெய்வத்தொகுதி,சுவிரா ஜெய்ஸ்வால்)*

*மேலும் பலராமர் குறித்த அவர்களின் சித்திரிப்பில் மதுபானப்பிரியர், யமுனை நதியை இரண்டாகப்பிரித்தவர், பனைக்கொடியினை அடையாளமாகக் கொண்டவர். நாகர் எனப்படும் இனக்குழுச்சமூகத்தைச் சேர்ந்தவர் என்றும் கருதுகின்றனர். பயிர்களை நாசப்படுத்திய திவிவிதா என்ற வானர இராட்சத வீரர்களைக் கொன்று வீழ்த்தினார். போன்ற விவரணைகள் பலராமனுக்குரியவை.*

*"இந்திய நாட்டார் மரபில் சில மாநிலங்களில் வேளாண் தொழில் வளர்ச்சிக்கு உதவுபவனாக பலராமன் காட்டப்படுகின்றான்.இது பற்றிய சில தொன்மங்களும், புராணங்களும் உள்ளன. இவனே வேளாண் தொழிலைக் கண்டுபிடித்தவன், உதவுபவன் என்பர். நாகர் இனத்தில் விவசாயக் கடவுளாக இவன் வழிபாடு பெறுகின்றான் இந்தச் சமூகத்தில் இவனை நீரின் பெருக்கத்துடனும் உணவு உற்பத்தியுடனும் தொடர்புபடுத்திப் பேசும் கதைகள் உள்ளன. விஷ்ணு தருமோத்திர புராணம் விவசாய உற்பத்தியில் இடம் அதிகம் எனக் கூறுகிறது"(ப.3, ஏர் ஆயுதக் கடவுள்,அ.கா.பெருமாள்).*

*தேனுகா,பிரளம்பா ஆகியோரைக் கொன்றவர். அஸ்தினாபுரநகரத்தையே தன் ஏர் ஆயுதத்தால் தாக்கியவன். அர்த்தசாத்திரம் சங்கர்ஷணர் (பலராமர்) துறவிகளின் தெய்வம் பெரிய யோகி, துவாபரயுகத்தின் இறுதியிலும் கலியுகத்தின் தொடக்கத்திலும் சாத்துவத வழிபாட்டைப் புகுத்தியவர். ஆதிசேஷனுடைய அவதாரமாக அவர் கருதப்பெற்றார். அவருடைய மரணத்தின்போது நாகம் ஒன்று அவருடைய வாயிலிருந்து வெளிவந்ததாகச் சொல்லப்படுகின்றது. பலராமர் வைணவ சமயத்தோடு தொடர்புடைய இறைவன் ஆனால், பாஞ்சராத்திர சம்ஹிதை சங்கர்ஷணரையும், ருத்திர சிவத்தையும் ஒன்றுபடுத்திக் கூறுகின்றது. பிரம்மாண்ட புராணத்தில் ருத்திரர், கலப்பையை ஆயுதமாகக் கொண்டதால் ஹலாயுதர் என்று வழங்கப்படுகிறார். பலராமனும் கலப்பையை ஆயுதமாகக் கொண்டவர். சிவனுடன் பலராமனையும் இங்கே இணைத்துக் காண்பது நோக்கத்தக்கது. இவ்வாறு உயர் நிலையிலிருந்த பின் வாசுதேவ நாராயணரோடு கிருஷ்ண,பலராம வழிபாடு இணைந்ததால் வேளாண் சமூகத்திலும் பலராம வழிபாடு பின்னுக்குத்தள்ளப்பட்டது. வடநாட்டில் வடமதுராவில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளில் தலையில் பாம்புக்குடையும், ஒரு கையில் கலப்பையும் ஒரு கையில் உலக்கையுடன் இருப்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தே மற்றொன்றும் நோக்கத்தக்கது இராமவதாரத்தில் ஆதிசேஷனின் அம்சமாக இலக்குவனன் கருதப்படுகின்றார். நாட்டுப்புற வழக்கில் முன் பிறவியில் இளைய சகோதரனாக இராமனின் ஏவலாளாக இருந்த இலக்குவனன் அடுத்த பிறவியில் கண்ணனுக்கு வழிகாட்டியாக வாழ விரும்பியதாகதாகவும் அதன் பயனாகவே பலராம அவதாரம் எடுத்ததாகக் கூறப்படுகின்றது. கிருஷ்ண அவதாரத்தில் பலராமன் முன்னோன் போன்றில்லாமல் கிருஷ்ணனின் துணையாகவே படைக்கப்பட்டுள்ளதினின்றும் பலராமன் குறித்த சித்திரிப்பின் வலுவின்மையும் கொண்டு இது பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட கதைகளில் ஒன்றாகும் என்பதை அறியமுடிகின்றது. மேலும் இலக்குவனன் தசாவதாரங்களில் ஓர் அவதாரமாகக் கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*"முதன்முதலில் இருதெய்வங்களும் (சங்கர்ஷணர்,வாசுதேவர்) பெருந்தேவதையான ஏகானம்சாவுடன் இணைந்த துணைக்கடவுளாகவே கருதப்பெற்றனர்… … … … … … … … … …. ஏனெனில் வைதீக தெய்வமாகிய நாராயணனுடைய வெளிப்பாடுகளாகவே அவர்கள் கருதப்பெற்றனர். ஆனால் பிற்காலத்தில் வாசுதேவன் நாராயணன் அடையாளமானார்.*

*நாராயணன் மிக முக்கிய மனித அவதாரமானார். அதே போல் சங்கர்ஷண பலதேவர் முக்கியத்துவத்தை இழந்து துணைக்கடவுள் நிலைக்குக் கீழிறங்கப்பட்டார். நாராயணனுடைய படுக்கையும் துணையுமான சேஷநாகத்தின் அவதாரமானார். இவ்வளர்ச்சிப் போக்குகள் பாகவத சமயம் பாமரர்களிடையே செல்வாக்கு அடைவதற்கு மிகவும் உதவின". (பக்.317-318, வைணவ தெய்வத்தொகுதி, சுவிரா ஜெய்ஸ்வால்)*

*இவ்விரு கருத்துக்களையும் நோக்குமிடத்து வடமொழியில் பலராமன் பல அற்புதங்கள் புரிந்த வேளாண் கடவுள். தமிழ் இலக்கியங்களில் பலராமன் குறித்த சித்திரிப்பில் வர்ணனை என்ற அளவிலேயே நின்றுவிடுகிறது. பலராமனின் அற்புதங்கள் எடுத்துக்காட்டப்படவில்லை சகோதரனான கிருஷ்ணனின் பாலலீலைகள் முதல் பின்னர் வடமொழி பாகவத புராணத்தில் கூறப்படும் பல அற்புதங்களையும் தமிழ் இலக்கியங்களில் விதந்தோதுகின்றன. பரசுராம அவதாரம், வராக அவதாரம், வாமன அவதாரம், மச்ச அவதாரம், கூர்ம அவதாரம் போன்ற அவதாரங்கள் தமிழ் இலக்கியங்களில் பெறுமிடம் அளவிற்கே பலராமன் குறித்த செய்திகளும் இடம்பெறுகின்றன. பழமையான இனக்குழு மக்களின் வணக்கத்தின் அம்சத்தையே பலராம வழிபாட்டில் இருந்ததைக் கண்டுணரமுடிகின்றது. நிலவுடைமைச் சமூகம் தோற்றம் பெற்ற நிலையில் வேளாண்மை என்ற அடிப்படைத் தொழிலுக்குரிய தெய்வமான பலராமன் வழிபாடு வழக்கினின்று மறைந்தது. இதிகாசங்கள் வலியுறுத்திய பெருந்தெய்வங்கள், நிலவுடைமை அமைப்பின் குறிப்பாக ஆயர்களின் தெய்வமான கிருஷ்ணன் தொடர்வழிபாட்டிற்குரியவராக முன்னேறினார். தமிழ் நிலப்பகுதியிலும் இந்நிலையே தொடர்வதைக் காணமுடிகின்றது.*

*தொகுப்புரை*

*இனக்குழு வாழ்விலிருந்து நாகரிகம் வளர்ச்சியடைந்து மக்களின் சமூகத்தேவைகள், வைதீக பிராமணர்கள் தங்களின் இருப்பை நிலைநிறுத்த முயன்றதன் விளைவாக விளிம்பு நிலை மக்களின் தெய்வங்கள் மாயோன் கிருஷ்ணன் என்ற பெயரில் பெருந்தெய்வ நிலைக்கு உயர்கின்றனர். பின்னர் உழவர்களின் அடையாளத்தைத் தாங்கிநிற்கும் பலராமன் பெருவழிபாட்டு முறையிலிருந்து பின்னுக்குத்தள்ளப்படுகின்றார். பலராமர் வழிபாட்டின் பின்னணியில் இனக்குழுச்சமுதாயத்தின் சிதைவையும் நிலவுடமைச்சமூகத்தின் நிலைபேற்றையும் காணமுடிகின்றது. தொல்காப்பியர் காலத்தில் இருந்த நால்வகை நிலத்தெய்வங்களையடுத்து பலராமனை நம்பிக்கை சார்ந்த தெய்வமாக இனக்குழுச்சமூகம் வழிபட வாய்ப்பிருந்திருக்கின்றது. இந்திர வழிபாடு, வருண வழிபாடு தொல்காப்பியத்தை அடுத்த நிலையில் வழக்கிழந்ததைப் போன்று பலராம வழிபாடும் வழக்கிழந்தது. காலப்போக்கில் வைணவ சமயம் பல மாறுதல்களுக்கு உள்ளானது. குலக்குறி வழிபாட்டின் அழிவும் நிலவுடைமைச் சமூகத்தின் வளர்ச்சி, மாற்றம்தான் இன்றைய வைணவசமயமும் பெருந்தெய்வ நிலையும் ஆகும். பலராமர் வழிபாடு தொடர்பாக தமிழ், வடமொழி இரண்டிலும் காணப்படும் ஓர் ஒற்றுமை மனித சமுதாயம் உழவினால் உணவு உற்பத்தியைச் செய்தபொழுது உருக்கொண்ட தெய்வமாகும். ஆனால் இராம, கிருஷ்ண அவதாரங்கள் பெற்ற பெருந்தெய்வ நிலையை அடையாமல் துணைமைத் தெய்வமாக மாறியதும் வழிபாட்டு நிலையிலிருந்து மறைந்ததையும் காணமுடிகின்றது.*

*துணைநின்ற நூல்கள்*


1. *ஆறுமுக நாவலர், கே., (1983), இந்துமத இணைப்பு விளக்கம், நாகர்கோவில்: எம்.எஸ்.எம். அச்சுக்கூடம்.*
2. *இராகவையங்கார், மு., (2010), ஆராய்ச்சித் தொகுதி, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.*
3. *சிவகுமார், ஜ., (தொ.ஆ.), (2011), செவ்வியல் இலக்கிய ஆய்வுகள், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*
4. *சுப்புரெட்டியார், ந., (1998), வைணவமும் தமிழும், சென்னை: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.*
5. *சுவிரா ஜெயஸ்வால், (2019)., வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*

6. தட்சிணாமூர்த்தி,அ.,(2019) தமிழர் நாகரிகமும் பண்பாடும், சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.
7. தோதாத்ரி,எஸ்., (2010), வைணவம் மார்க்சியப் பார்வை, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
8. பரமசிவன்,தொ., (1995), தெய்வங்களும் சமூக மரபுகளும், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. பரமசிவன்,தொ., (2001), பண்பாட்டு அசைவுகள், நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.
10. http://www.keetru.com/index.php/ungal noolagam

********* ********* ********** ********* ********* ********** ********** **********